**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 312/2023**

பெயர் : வில்சன் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி :18.02.2026

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தந்தை பெயர் ஆரோக்கியசாமி. என் நிலத்திற்கு தகராறு செய்வதால் வழக்கு போட்டுள்ளேன். 1 ஏக்கர் 6 குழி தாவா நிலம். வா.சா.ஆ. 5 ஆவணப்படி எவ்வளவு சொத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் மொத்தமாக 10 1/2 மா நிலம் வாங்கி உள்ளேன். ஏற்கனவே சந்தானம் ஐயர் அவரின் அப்பாவிற்கு சொந்தம். சந்தான ஐயருக்கு ஊரில் எவ்வளவு சொத்து உள்ளது என்பது தெரியாது. 10 1/2 மா நிலத்தை சந்தான ஐயர் நிலத்தை நேரடியாக சாகுபடி செய்து வந்தார். எந்த ஆண்டு வரை சாகுபடி செய்தார் என்பது தெரியாது. அந்த நிலத்தை என் தந்தை சாகுபடி செய்தாரா என்பது தெரியாது.1998 ல் என் தந்தை இறந்தார். வழக்கு சொத்தை அபகரித்து வைத்துக் கொண்டதாக சிமியம் பெயரில் நாகப்பட்டிணம் நிலம் அபகரிப்பு பிரிவில் 12.06.2020 புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 4 நாட்கள் கழித்து இரு தரப்பையும் அழைத்து 16.06.2020 ல்விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நான் என் சகோதரர் இருவர் என் தரப்பில் சென்றோம். பிரதிவாதி தரப்பில் சிமியோன், ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் வந்தார்கள். பணம் வாங்கும்போது ஆரோக்கியசாமி அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்தாக அவர்கள் சென்னார்களா என்றால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக சொல்லிவிட்டோம், விசாரணையில் எதுவும் எழுதி வாங்கவில்லை. 10 1/2 நிலத்தில் 1 ஏக்கர் 2 செண்ட் பிரதிவாதிகள் வைத்துக்கொண்டு கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்களா என்றால் நிலம் என் வசம் தான் உள்ளது. 2014 முதல் நிலத்தில் வாக்கு சொத்து உட்படி நான் சாகுபடி செய்து வருகிறேன். நெல், பயிர் உளுந்து சாகுபடி செய்துவது உண்டு. வழக்கு சொத்துக்கு அரசாங்க சார்பில் நிவாரணம் காப்பீடு தொகை 2014 முதல் வாங்கி உ ள்ளேனா என்றால் 2, 3 வருடங்கள் மட்டுமே கொடுத்தார்கள் அதன் பின்னர் வாங்கவில்லை. வழக்கு போடப்பட்டது 2021 என்று நினைக்கிறேன். குறைந்த பட்சம் 6 ஆண்டுகள் நிவாரணம் வாங்கி உள்ளோ என்றால் நான் வெளிநாடு சென்றிருந்தேன் வாங்கினார்களா என்பது தெரியாது. அரசு நிவாரணம்

கொடுத்தார்களா என்பது என் மனைவிக்கு தான் தெரியும். அவர் தான் சாகுபடி செய்தார். 2015 ல் வெளிநாடு சென்றேன். சுமார் 2 வருடங்கள் அங்கிருந்தேன். நிவாரணம் வாங்கியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 2014 முதல் நிலவரி கட்டியுள்ளேனா என்றால் இல்லை. வழகககு சொத்து என் அனுபவத்தில் உள்ளதை காட்ட பட்டா, கிரய ஆவணம் தவிர வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை 22.03.1995 ல் கிரயம் வாங்கி தருவதகாக என் தந்தை முதல் பிரதிவாதிக்கு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தசாமி பிள்ளை மகன் சம்பந்தம் பிள்ளை எங்கள் ஊரில் இருக்கிறாரா என்பது தெரியாது. என் தந்தை எழுதிக் கொடுத்த அக்ரிமெண்டில் நானும் சாட்சி கையெழுத்துபோட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1995 மார்ச் மாதம் முதல் தாவா சொத்து பிரதிவாதிகள் தான் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சொத்தை வசம் கேட்டு தான் வழக்கு பேடவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

MUMTAJ

Digitally signed by MUMTAJ
Date: 2026.02.19 16:17:26 +0530